## நம்மாழ்வார் அருளிச் செய்த
## யஜுர் வேத ஸாரமான
# திருவாசிரியம்

### திருவாசிரியம் தனியன்

### அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அருளிச் செய்தது

காசினியோர் தாம் வாழக் கலியுகத்தே வந்துதித்து *
ஆசிரியப் பாவதனால் அருமறை நூல் விரித்தானைத் *
தேசிகனைப் பராங்குசனைத் திகழ் வகுளத் தாரானை *
மாசடையா மனத்து வைத்து மறவாமல் வாழ்த்துதுமே

## நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாசிரியம்

2578 * செக்கர்மா முகில் உடுத்து மிக்க செஞ்சுடர்ப்
பரிதி சூடி * அஞ்சுடர் மதியம் பூண்டு *
பல சுடர் புனைந்த பவளச் செவ்வாய் *
திகழ் பசுஞ்சோதி மரகதக் குன்றம் *
கடலோன் கைமிசைக் கண் வளர்வது போல் *
பீதகவாடை முடி பூண் முதலா *
மேதகு[1] பல்கலன் அணிந்து * சோதி
வாயவும் கண்ணவும் சிவப்ப * மீதிட்டுப்
பச்சை மேனி மிகப் பகைப்ப *
நச்சு வினைக் கவர் தலை அரவின் அமளி ஏறி *
எறிகடல் நடுவுள் அறிதுயில் அமர்ந்து *
சிவன் அயன் இந்திரன் இவர் முதல் அனைத்தோர் *
தெய்வக் குழாங்கள் கைதொழக் கிடந்த *
தாமரை உந்தி தனிப் பெரும் நாயக! *
மூவுலகளந்த சேவடியோயே! 1

2579 உலகு படைத்துண்ட எந்தை * அறை கழல்
சுடர்ப் பூந்தாமரை சூடுதற்கு * அவாவா
ருயிர் உருகி உக்க * நேரிய காதல்
அன்பில் இன்பு ஈன் தேறல் * அமுத
வெள்ளத்தானாம் சிறப்பு விட்டு * ஒரு பொருட்கு
அசைவோர் அசைக * திருவொடு மருவிய
இயற்கை * மாயாப் பெரு விறல் உலகம்

[1] மெய்தகு

மூன்றினோடு நல்வீடு பெறினும் *
கொள்வதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே? 2

2580 குறிப்பில் கொண்டு நெறிப்பட * உலகம்
மூன்றுடன் வணங்கு தோன்று புகழ் ஆணை *
மெய் பெற நடாய தெய்வம் மூவரில்
முதல்வனாகி * சுடர் விளங்ககலத்து *
வரை புரை திரை பொர[2] பெரு வரை வெருவர[3] *
உருமுரல் ஒலி மலி நளிர் கடல் படவர
வரசு உடல் தட வரை சுழற்றிய * தனிமாத்
தெய்வத்து அடியவர்க்கு இனி நாம் ஆளாகாவே
இசையும் கொல்? * ஊழிதோறூழி ஓவாதே 3

2581 ஊழிதோறூழி ஓவாது * வாழிய
என்று யாம் தொழ இசையும் கொல்? *
யாவகை உலகமும் யாவரும் இல்லா *
மேல் வரும் பெரும் பாழ் காலத்து * இரும் பொருட்
கெல்லாம் அரும்பெறல் தனி வித்து * ஒரு தான்
ஆகித் தெய்வ நான்முகக் கொழுமுளை
ஈன்று * முக்கண் ஈசனொடு தேவு பல
நுதலி * மூவுலகம் விளைத்த உந்தி *
மாயக் கடவுள் மாமுதல் அடியே 4

2582 மாமுதல் அடிப் போது ஒன்று கவிழ்த்தலர்த்தி *
மண் முழுதும் அகப்படுத்து * ஒண் சுடர் அடிப் போது
ஒன்று விண் செலீஇ * நான்முகப் புத்தேள்
நாடு வியந்துவப்ப * வானவர் முறை முறை
வழிபட நெறீஇ * தாமரைக் காடு
மலர்க் கண்ணொடு கனி வாய் உடையது
மாய் * இருநாயிறு ஆயிரம் மலர்ந்தன்ன *
கற்பகக் காவு பற்பலவன்ன *
முடி தோள் ஆயிரம் தழைத்த *
நெடியோய்க்கு அல்லதும்[4] அடியதோ உலகே? 5

2583 ஓஓ! உலகினது இயல்வே! * ஈன்றோள் இருக்க
மணை நீராட்டி * படைத்திடந்து உண்டுமிழ்ந்
தளந்து * தேர்ந்து உலகளிக்கும் முதற்பெரும்
கடவுள் நிற்ப * புடைப் பல தான் அறி
தெய்வம் பேணுதல் * தனாது

---

[2] பொரு
[3] வெருவுற
[4] அல்லது

புல்லறிவு ஆண்மை பொருந்தக் காட்டி *
கொல்வன முதலா அல்லன முயலும் *
இனைய செய்கை இன்ப துன்பளி *
தொல்மா மாயப் பிறவியுள் நீங்கா *
பல்மா மாயத்து அழுந்துமா நளிர்ந்தே 6

2584 * நளிர் மதிச் சடையனும் நான்முகக் கடவுளும் *
தளிர் ஒளி இமையவர் தலைவனும் முதலா *
யாவகை உலகமும் யாவரும் அகப்பட *
நிலம் நீர் தீ கால் சுடர் இருவிசும்பும் *
மலர் சுடர் பிறவும் சிறிதுடன் மயங்க *
ஒருபொருள் புறப்பாடின்றி முழுவதும்
அகப்படக் கரந்து * ஓர் ஆலிலைச் சேர்ந்த எம்
பெருமா மாயனை அல்லது *
ஒருமா தெய்வம் மற்றுடையமோ யாமே? 7

**அடிவரவு:** செக்கர் உலகு குறிப்பு ஊழி மாமுதல் ஓஓஉலகு நளிர் முயற்றி

**நம்மாழ்வார் திருவடிகளே சரணம்**